


# உதய ஜோதி தரிசனம்

எதுராபொல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆதீனகுரு
ஸ்ரீ ஹரிஹர சுதன் சேவா சங்க குருசுவாமி
பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள் அவர்களின்

## 18ம் வருட புனித சபரிமலை யாத்திரை சிறப்புமலர்







வெளியீடு :
ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்பா சேவா சங்கம்
புளத்கோபிட்டிய வீதி, யக்கல்ல, நீலகிரிய.
2019.12.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. மணிகண்டன் உ சிவமயம்

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் குருகுல பயிற்சி பெற்றதற்கான சிறப்பு சான்றிதழ்

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

**No.1 சாலைத் தெரு காஞ்சிபுரம் -631 502.**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி **ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின்** அருளாணைப்படி ஸ்ரீ மடத்தில் இலங்கையைச் சார்ந்த புளத்கோப்பிட்டிய, எதுராபொல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆதிபூசகர் 15.05.1999 முதல் 30.05.199 வரை காஞ்சி மடத்தில் நடைபெற்ற குருமார் பயிற்சி நெறியில் கலந்துக் கொண்டு புனிதத் தன்மை மிகுந்த தேவார திருவாசகம், அருட்பாக்கள், வேதங்கள் ஓதி வழிபடும் முறைகள் பூஜை முறைகள் முதலான விடயங்கள் பற்றி தகுந்த அறிஞர்களும், புலவர்களும் அளித்த பயிற்சி வகுப்புகளில் சிவத்தொண்டர் **ராமையா உதயகுமார்** சர்மா அவர்கள் பங்கு கொண்டு பயிற்சி பெற்றுள்ளார் என்பதற்கு வழங்கப்படும் சிறப்பு சான்றிதழ்.

S.உமாபதி சிவாசாரியார்
ஆகம அத்யாபகர்

P.நீலகண்ட ஐயர்
ஸ்ரீ கார்யம் ஏஜன்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா

# உதய ஜோதி தரிசனம்

எதுராபொல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆதீனகுரு
ஸ்ரீ ஹரிஹர சுதன் சேவா சங்க குருசுவாமி

## பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள் அவர்களின்

## 18ம் வருட புனித சபரிமலை யாத்திரை சிறப்புமலர்




தொகுப்பாசிரியர் :
தெஹியோவிற்ற, யோகமையூர்
**சிவ ஸ்ரீ க. தர்மகுலராஜகுரு குருக்கள்**



வெளியீடு :
**ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்பா சேவா சங்கம்**
புளத்கோபிட்டிய வீதி, யக்கல்ல, நீலகிரிய.
தொ.பே. 071-6954719
2019.12.22




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டுத் தரவுகள்

நூலின் பெயர் : உதய ஜோதி தரிசனம்

மொழி : தமிழ்

விடயம் : எதுராபொல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆதீனகுரு ஸ்ரீ ஹரிஹர சுதன் சேவா சங்க குருசுவாமி பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள் அவர்களின் பதினெட்டாம் வருட சபரிமலை புனித யாத்திரை சிறப்பு மலர்

ஆசிரியர் : சிவ ஸ்ரீ க. தர்மகுலராஜகுரு குருக்கள்

உதவி ஆசிரியர் : சிவ ஸ்ரீ உதய கஜராம் சர்மா
: M. சுஜித் அமரஜி

வெளியீடு : ஸ்ரீ ஹரிஹர சுதன் சேவா சங்கம்
புளத்கோபிட்டிய வீதி, யக்கல்ல, நீலகிரிய.

கணனி வடிவமைப்பு : திரு. ஜே. பிரபாகரன்

அச்சுப் பதிப்பு : ஈடன் பிரிண்டர்ஸ்
இல. 537, பிரதான வீதி, புவக்பிட்டிய

முதல் வெளியீடு : 22.12.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் துதி




காந்தமலை சிகரத்தில்
கதிர் ஒளி முத்துப்போல
மகர தைமாத முதல் மாலையில்
தான் அங்கு தோன்றிடுவான்
ஜோதிமயமான ஜோதி சொரூபன்
அகிலத்தை ஆளுகின்ற ஐயனை
ஜோதி வடிவில் காண கூடிடுவோம்
கோடி நலம் பெற்றிடுவோம்

பரமனவன் திருமகனாம்
மோகினியால் பாலகனாம்
கணநாதன் தம்பி ஐயன்
கதிரமலையான் சோதரன்
பூ உலகை உய்விக்கும் ஸ்ரீ பூதநாதனை
உதய ஜோதி தரிசனம் கண்டு
வணங்கிடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்ரீ ஆதி சங்கராச்சாரிய சுவாமியே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உபநயண தீட்ஷாகுரு உமாபதி சிவாச்சாரியாரிடம் இருந்து
குருசுவாமி உதயகுமார் ஐயா நல்லாசி பெறும்வேளை.



குருசுவாமிகள் புடைசூழ பாராட்டு சான்றிதழ் பெறும் வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா சுவாமி கணபதி யோகி லிங்கநகர் ஹட்டன்
ஸ்ரீ பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள் ஐயா அவர்களின்
பதினெட்டாவது சபரிமலை யாத்திரை சிறப்பாக அமையவும், இவரது தெய்வீக பணி
மேலும் தொடரவும் எல்லாம் வல்ல ஆதிஷேஷனை பிராத்திக்கின்றேன்
ஓம் நமசிவாய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"அன்பே சிவம் அதுவே நலம்"*



பெரிய போர தீவு காளிபுரம் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் ஸ்ரீ பத்ரகாளி அம்மன் ஆலயங்களின் பிரதான குருவும் விஷ்வ பிரம்மாதீன பீடாதிபதி விஷ்வகுல திலகம் பண்டித ஆச்சார்ய அருட்கவியரசு, விஷ்வ பிரம்ம வை.இ.எஸ். காந்தன் குருக்கள் வழங்கிய அகமகிழ்ந்த வாழ்த்துப்பா.

இறைநெறியில் வாழ்வதே தெய்வீக வாழ்வு தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்ற அமுத மொழிகளுக்கு ஒப்ப சபரிமலை யாத்திரை ஒரு தவ வாழ்வுதான். அவ்வாழ்வினை உலகலாவியரீதியில் வாழும் ஐயப்பன் அடியார்கள் கார்த்திகையில் மாலையிட்டு சத்திய விரதத்தை கடைப்பிடித்து சத்திய மாலை அணிந்து சத்தியமான பொன்னு பதினெட்டாம் படிகளில் தங்கள் பாதங்களை பதித்து ஹரிகரன் ஆகிய ஆனந்த சித்தன் ஐயப்பன் முகம் பார்த்து அகம் பூகின்ற நற்காலம் இதை தொடர்ந்து காலம் காலமாக வழிவழியாக கடைபிடிக்கின்றவர்கள் ஏராளம் ஏராளம் அந்த வகையிலே என் அன்புக்குரிய பிரம்ம ஸ்ரீ ராமையா உதயகுமார் குருக்களின் பதினெட்டாவது சபரிமலை யாத்திரை நிறைவு பெற்றும் தொடர்ந்து நிலைபெறுவதற்கு ஒரு தவத்தின் பேயரே. ஐயா அவர்களின் ராமையா ஞானம்மாள் அவர்களின் தவ மகனாகவும் சிவன் ஜோதி அம்மாவின் அன்பு துணைவராகவும் இருப்பதும் ஒருபேறு. யக்கல நீலகிரிய புளத்கோபிட்டிய அந்த மண்ணினை சிறப்புக்கும் பெருமைக்குமாக வாழ்கின்ற தெய்வீக பணி செய்யும் குருக்கள் ஐயா அவர்களின் நிறைபணியாற்றி வருகின்றார் ஐயா அவர்களையும் சபரிமலை யாத்திரை பதினெட்டாவது ஆண்டினை நிறைவு பெற்று மீண்டும் யாத்திரைக்கு தவம் பூக்கின்றது. இப்புனித யாத்திரையில் ஐயாவுடன் தொடர் பயணம் செய்யும் தூயவர்கள் இடர் வந்த போது இதயம் கலங்காத இறையன்பார்கள் ஆகியோருக்கும் சபரிமலை ஈசனின் தன்னநார் செவியாட்டும் ஐயா அவர்களுக்கும் துணைவியார் மக்கள் செல்வங்களுக்கும் அண்ணாரை சூழ்ந்து வாழும் சுற்றங்களுக்கும் தெய்வீக அருள் பொழியட்டும். வாழ்வாங்கு வாழும் வகையில் வாழும் ஐயா அவர்கள் நீண்ட ஆயுளோடும் உடல் ஆரோக்கியத்தோடும் சீர் நிறைந்த செல்வ செழிப்போடும் இறைபணியும் சமூகத்தின் நிறைபணியுமாற்றி பல்லாண்டு வாழவேண்டும் என்று காளிகாபுர முத்து விநாயகர் பெருமானையும் தட்சனா காளியாகிய அன்னை பத்ரகாளியையும் மனமுருகி மெய்களால் வணங்கி அமைகின்றேன்.

**இவ்வண்ணம்,**
**என்றும் அன்புசால்**
**விஷ்வபிரம்ம ஸ்ரீ வை.இ.எஸ். காந்தன் குருக்கள் குடும்பத்தினர்**
**ஸ்ரீ காளிபுரம், பெரிய போரதீவு, மட்டகளப்பு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலத்கோபிட்டிய வீதி, யக்கல, நீலகிரிய
ஸ்ரீ ஹரிஹர சுதன் சேவா சங்க குருசுவாமி
பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குருசுவாமியின் தந்தையார்
திரு. ஜே. ராமையா



குருசுவாமியின் புதல்வி
உ. புஸ்ப அபிராமி




குருசுவாமியின் தாயார்
திருமதி. லூகஸ் ஞானம்மா



வலதுபக்கம் குருசுவாமியின்
சகோதரர் சிவ ஸ்ரீ ராஜேஸ்கண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருசுவாமியின் சிரேஸ்ட புதல்வன்
சிவ ஸ்ரீ உ. கஜராம் சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருசுவாமியின் இளைய புதல்வன்
உ. கஜமுக மணிகண்ட சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ பத்ர காளிகாம்பாள் தேவஸ்தானம்
## 2ம் நவகம்புர, கொழும்பு - 14
## குருநாதரின் நல்லாசியுரை



"மாத்துரு தேவோபவ, பித்துரு தேவோபவ, குருதேவோபவ
மனிதனை புனிதமாக்கும் மிக மகத்துவமான விரதம் ஐயப்பன் விரதமாகும்

ஐயப்பன் விரதம் அனுஷ்டித்து இவ்வருடம் பதினெட்டாம் மலை செல்லவிருக்கும் எங்களது அன்புக்கு பாத்திரமாகிய சர்மா என்று சகலரும் அழைக்கின்ற குருத்துவத்தில் பலம் வாய்ந்த குருக்கள் உதயகுமார் ஐயா அவர்கள் இம்முறை பதினெட்டாம் மலை செல்வதை அறிந்து அகம் மகிழ்கிறேன் அலங்காரத்தின் தனித்தன்மையும் ஆச்சார்யத்தின் ஓர் இடமும் மக்களை கவருகின்ற விதமான நிலை கொண்டவருக்கு பதினெடாம் மலை செல்ல ஐயன் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன். தான் பல சுவாமிமார்களை மலைக்கு அழைத்து சென்றவர். மலையகத்தில் தனக்கென ஓர் இடத்தை மக்கள் மத்தியிலே வென்று எடுத்தவர். மனித சேவையும் மகேஷன் பூஜையும் மகிழ்வுரச் செய்பவர். பதினெட்டாம் மலை இன்னும் பல மலை செல்வதற்கு பல குருமார்களின் திருவருள் கிடைக்க அன்னை பத்ர காளிகா அம்பாளின் திருவருள் கிடைக்க உளமார மகிழ்வோடு மனநிறைவோடு பிரார்திக்கின்றேன்.

*"நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்*
*நல்லதை போதிப்போம் நம் மக்களுக்காக சிந்திப்போம் செயற்படுவோம்*
*சந்திப்போம் சமய சேவை செய்வோம்*

**இங்ஙனம்,**
**அம்பிகை அடியான், காளிகாதாசன்**
**சிவ ஸ்ரீ கு.ல.மு. மோகன் சிவாச்சாரியார்**
**அகில இலங்கை சமாதான நீதவான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா

இஷ்ட லிங்கேஷ்வர பெருமான் துணை

ஸ்ரீ துர்க்கா காளியம்மன் துணை



## "ஒவ்வொரு ஆன்மாவும் தெய்வீக தன்மை நிறைந்தது"

நாம் பூமிக்கு வரும் போது எதையும் கொண்டுவரவில்லை போகும் போது எதையும் கொண்டு போவதும் இல்லை. கடவுளிடம் சரணடைபவன் முழுமையா ஆன்மீகவாதியாகின்றான். அந்நிலை ஒரு ஜீவன் முத்தனாகும் நிலைதனை அடைகிறான். ஆன்மா தன்னை உணரும் நிலை வரும் போதுதான் சபரிமலை யாத்திரையில் தன்னை ஈடுபடுத்துகிறது அவ்வாறு ஐயனின் புனிதமிகு சபரிமலை யாத்திரையில் பதினெட்டாவது தடவையாக மேற்கொள்ளும் பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் சிவாச்சாரியார் குருசுவாமி உன்னத நிலை அடைவதை என்னி அகமகிழ்கிறேன். அவருக்கு எல்லாம் வல்ல ஹரி ஹர சுதமைந்தன் ஸ்ரீ தர்மசாஸ்தாவினதும் அன்னை ஸ்ரீ துர்கா காளியம்பாளினதும் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு அவரது யாத்திரை பயணம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**இங்ஙனம்,**

**சிவ ஸ்ரீ சிவ சிவகுமார் காளகஷ்தி சிவாச்சாரியார்**

**(கண்டி ஐயா)**

**ஸ்ரீ துர்க்கா காளியம்மன் ஆலய பிரதம குரு**

**ஸ்ரீ மணிகண்டன் தீர்த்த யாத்திரை குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சுவாமியே சரணம் ஐயப்பா*

குருவருளும், திருவருளும் நிறையப் பெற்ற மங்களகரமான விகாரி வருடம் கார்த்திகை முதலாம் நாள் (17.11.2019) ஞாயிற்றுக்கிழமையன்று தன்னுடைய பக்தியோகம் என்பவற்றை வைத்து தொடர்ந்து பதினேழு தடவை மாலை அணிந்து இந்த வருடம் பதினெட்டாவது மாலை அணிந்து தன்னுடைய பக்தியை முன்னெடுத்து செல்லும் எங்கள் ஐயா பிரம்ம ஸ்ரீ ராமையா உதயகுமார் குருக்கள் அவர்கள் தொடர்ந்து கால காலமாக சபரிமலை யாத்திரையை தொடர வேண்டும் அவர் செய்கின்ற இறை பணியும், சமூக சேவையும் உயர்ந்திட என்னுடைய நல்லாசிகள் உரித்தாகட்டும். குருவருளும் திருவருளும் நிறைவாக கிடைக்கட்டும்.

*திருவார்க்கும் செய்நாமம் கைகூடும் செஞ்சொற்*
*பெறுவார்க்கும் பிருந் பெருக்கும் பெறுவார்க்கும் ஆதலால்*
*வானோரதம் ஆனை முகத்தானை*
*காதலால் கூப்புவரதம் கை*

*சுவாமியே சரணம் ஐயப்பா*

**இப்படிக்கு,**
**என்றும் இறைபணியில்**
**சிவ ஸ்ரீ சுதர்சன குருக்கள்**
**அக்கறைபற்று, மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ධම්මො හවේ රක්ඛති ධම්මචාරි



විහාරාධිපති
මාමිණියාවේ සීලරතන ස්ථවිර
(බී.ඒ. ගෞරව: එම්. ඒ. අධ්‍යාපන ඩිප්ලෝමා)
ශ්‍රී සුගත විශුද්ධාරාමය,
බුලත්කොහුපිටිය,
ශ්‍රී ලංකාව
දු.අ. 036- 22 47 281

අනාදිමත් කාලයක් තිස්සේ මිනිස් හදවත් තුල පවතින දේව විශ්වාසයන් අනුව යමින් ජනතාවට දේවාශිර්වාදය ලබා දීමට කටයුතු කිරිම අගය කරමි. වසර 18 ක් මුළුල්ලේ අයියප්පන් දෙවිඳුන් වෙනුවෙන් පූජා පවත්වාගෙන එනු ලබන බුලත්කොහුපිටිය යක්ඇල්ල නීලගිරි ගම්මානයේ බ්‍රහ්ම ශ්‍රී උදය කුමාර කුරුක්කල්තුමාගේ ආගමික හා සමාජික මෙහෙවර ද අගය කරමි. යහපත් චේතනාවෙන් ජනතා දයානුකම්පාවෙන් කරනු ලබන ආගමික සත්කාරයන් සර්ව ප්‍රකාරයෙන්ම සාර්ථක වේවායි පතමි.

මෙයට


මාමිණියාවේ සීලරතන හිමි

විහාරාධිපති



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா




இருமுடி தலையில் சுமந்து, இதயத்தில் பக்தி சுமந்து,
படிகள் பல கடந்து பரமன் திருமகன் அருள் பெற்ற
குருசுவாமி பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் ஐயா அவர்களின்
18ம் முறை புனித சபரி யாத்திரை பயணம் சித்திப்பெற
இறைவனைப் பிரார்த்தித்து உளமார வாழ்த்துகிறேன்

**இங்ஙனம்,**

**எட்டியாந்தோட்டை, பனாவத்தை, 1ம் இல,**
**தேவிப்புரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு**
## வைதீக பிரம்ம ஸ்ரீ விஜயகமல் ஐயர்

---



பொண்ணம்பலதுரை புண்யா நமோ நம
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நம
அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி
அடியேனையும் சபரிமலை கூட்டிச்சென்ற
என் குருநாதர் பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார்
குருக்கள் ஐயா அவர்களின்
18ம் புனித சபரி யாத்திரை பயணம்
சித்தி பெறவும், முத்தி பெறவும்
இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

**இங்ஙனம்,**

**புளத்கோபிட்டிய, எதுராபொல மத்திய பிரிவு**
**ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலய ஆதீனகர்த்தா**
## சிவ ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ணன் ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



## திரு. மாரிமுத்து (ஜே.பி)

கல்தோன்றி மண்தோன்றா காலத்தின் உதயமாகிய சைவ சமயத்தின் அர்த்தபுஷ்டியான சாஸ்த்திரங்களும் சம்பிரதாயங்களும் இறை வணக்க வழிமுறைகளும் முறைபடி சென்றடையாத மலையக மக்களுக்கு நம் சமுகத்தில் உதயமாகிய ஆர். உதயகுமார் சர்மா கடந்த 30 ஆண்டு காலமாக ஆன்மீக சேவையாற்றி வரும் ஐயா அவர்கள் பலவிதமான சோதனைகளையும், வேதனைகளையும் தாண்டி இறையருளோடு தன்னுடைய ஆன்மீக பணியை தொடர்ந்து முன்னெடுத்து செல்வது. இறைவனின் ஆசீர்வாதத்தோடுதான் என்றால் மிகையாகாது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பூரண ஆசீர்வாதம் மற்றும் உதவிகள் மூலம் தென்னிந்தியாவில் ஆன்மீகம் சம்பத்தமான பயிற்சி பெற்று சமய குறவர்களிடம் தீட்சைப் பெற்று படி படியாக வளர்ச்சி பெற்று இன்று திரு. சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களின் ஆன்மீக கனவை நனவாக்கி பல பட்டம், பதவிகளை பெற்று ஆன்மீக பணியில் சிறந்து விளங்குகின்றார். தென்னிந்திய, கேரளா மாநிலத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் சாஸ்தா பீடத்துக்கு கடந்த பதினேழு வருடமாக குருசுவாமி ஸ்தானத்தில் பல நூற்றுக்கணக்கான ஐயப்ப சுவாமிமார்களை அழைத்து சென்ற குருசுவாமி சிவ ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள் ஐயா அவர்களது இறைபணி தொடர இறைவனை பிரார்த்தித்து இன்னும் பல சுவாமிமார்களை சபரிக்கு அழைத்துச் செல்லும் பாக்கியத்தினை இறைவன் ஐயப்பன் அருளாசி கிடைக்க வேண்டுமென வாழ்த்தி வணங்குகின்றேன்.

**இங்ஙனம்,**
**பீ.வி. மாரிமுத்து (ஜே.பி)**
**எதுராபொல தோட்டம், புளத்கோபிட்டிய.**
**A/15/1/N/14/94**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இப்பூவுலகை உய்விக்க பூவுலகிலேயே அவதரித்த பூதநாதனே சரணம் அவனருளாலே அவன் தாழ் வணங்கி ஐயனருளாலே ஐயப்பனுக்கு மாலை அணிந்து சபரியாத்திரை செல்லும் பாக்கியத்தை அருளிய ஐயன் நல்ல குருநாதரையும் காட்டித் தந்ததால் கவனமாகவும், கன்னியமாகவும் என்னை சபரிமலை கூட்டிச்சென்ற குரு நாதர் இரத்தினபுரி மாவல, ஸ்ரீ கணேசன் ஆசாரி குருசுவாமியுடன் அடியேன் முதல் மாலையை தேவாலகந்த, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்தேன். ஐயப்பன் வழிபாட்டின் சிறப்பை எடுத்து சொல்லி என்னையும் மாலை அணிய வழிசமைத்தவர் குருசுவாமி மகேந்திரன் அதேபோல் அந்நாளில் என் அருகில் இருந்து ஆதரவு தந்த என் நண்பர் தெஹியோவிற்ற முருகன் ஆலய குரு சிவ ஸ்ரீ கந்த ராஜா குருக்கள் அவர்கள் மற்றும் இந்நாள் வரை இப்புனித யாத்திரை பயணம் சென்று வர வழிகோலக இருந்தவர்களுக்கும் என் மனநிறைவான நன்றியை தெரிவிப்பதுடன் இம்முறை அடியேனின் 18ம் வருட சபரியாத்திரையை முன்னிட்டு "உதய ஜோதி தரிசனம்" எனும் நூல் ஒன்றினையும் வெளியிட என்னிய போது எனது நண்பர் தெஹியோவிற்ற, யோகமையூர், குருசுவாமி சிவ ஸ்ரீ க. தர்மகுலராஜகுரு குருக்கள் அவர்கள் முன்வந்து நூல் தொகுப்பினை சீரமைத்து தந்தார். ஐயப்பன் முறைகளை நன்கு கற்றறிந்த குருசுவாமி பல நூல்களை தொகுத்து வெளியிட்ட அனுபவம் மிகுந்தவராதலால் அவரிடமே அப்பணியை கொடுத்தேன் அதன் படி நூல் சிறப்பாக வெளிவர உழைத்தமைக்காக ஐயா அவர்களுக்கும் நல்லாசி வழங்கிய குருமார்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் சேவா சங்க சுவாமிமார்களுக்கும் ஈடன் அச்சகத்தாருக்கும் என் குடும்பத்தாருக்கும் இன்னும் பல வழிகளில் உதவிகள் நல்கிய அனைவருக்கும் எனது மனநிறைவான நன்றிகளை தெரிவித்து அமைகிறேன்.

இங்ஙனம்,
ஸ்ரீ ஹரிஹர சேவா சங்க குருசுவாமி
பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை

"தொடர்ந்த இறை நினைப்பால்
சிறந்த கல்வி நிறைந்த செல்வம்
உயர்ந்த ஞானம் பெறலாம்"

"பேதமில்லாத வாழ்வே சிறந்த நல்வாழ்வாகும்"



ஐயன் ஐயப்பன் வழிபாட்டில் சாதி, மதம், குலம், இனம், தேசம் என வேறு எதுவித பேதங்களும் இல்லாததால்தான் சதா ஐயப்பன் நினைப்பால் வாழும் ஐயனின் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இக்கால கட்டத்தில் இலங்கை முழுவதுமாக பல சேவா சங்கங்களினூடாக பல்லாயிரக் கணக்கான அடியார்கள் சபரி பயணம் மேற் கொள்கிறார்கள் அவ்வகையில் எமது மலையக பிரதேசத்தில் வாழும் ஐயப்ப அடியார்களும் குருசுவாமிமார்களும் செம்மையாக விரதம் காத்து சபரி புறப்படுகிறார்கள். யுகங்கள் பல கடந்து கலியுகத்தில் வந்துதித்த கானக வாசன் கருணையால் இம் மானிடப்பிறவியில் நம்மை அத்வைதனாக்கும் அற்புத விரதநெறியான ஐயப்ப விரதமாதலால் ஐயப்பனுக்கு மாலை அணிந்து விரதம் காத்து கடந்த பல ஆண்டுகள் இடைவிடாது சபரி பயணம் மேற்கொண்டு வரும் ஸ்ரீ ஹரிஹர சுதன் சேவா சங்க குருசுவாமி எனது நண்பர் பிரம்ம ஸ்ரீ ஆர். உதயகுமார் குருக்கள் அவர்களின் 18ம் வருட பயண மலராக "உதய ஜோதி தரிசனம்" நூல் வெளிவர உள்ளது. இந் நூல் தொகுப்பு பணியை எனக்களித்த குருசுவாமிக்கு முதற்கண் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் இந்நூலில் ஐயப்பனின் வரலாற்று சுருக்கம் சில முக்கிய விரத நெறிகளையும் பஜனை பாடல்களையும் என்னால் ஆன வகையில் நெறிபடுத்தியுள்ளேன். மேலும் இந்நூல் சிறப்பாக வெளிவர பல வழிகளிலும் உதவிகரம் கொடுத்த அன்பர்கள் யாவருக்கும் நன்றி கூறுவதுடன் நூல் பதிப்பு செய்து தந்த "ஈடன் பிரிண்டர்ஸ்" உரிமையாளர் திரு. ஜே.பிரபாகரன் அவர்களுக்கும் என் மன நிரைவான நன்றிகளை தெரிவித்து குருசுவாமியுடைய 18ம் வருட சபரி யாத்திரை சித்தியடைய வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

தெஹியோவிற்ற, யோகமையூர்
ஸ்ரீ பால விக்னவிநாயகர் ஆலய ஆதீனகுரு
யோகதர்ம சாஸ்தா சேவா பீடம் குருசுவாமி
**ஸ்ரீ சாஸ்தா பூஜிதர் சிவ ஸ்ரீ க. தர்மகுலராஜகுரு குருக்கள்**

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்ப தியானம்



**ப்ரணவதரு விஹங்க மாதி தேவம்**
**குணமய ஸம்ஸ்ருதி கானனோரு தாவம்**
**கணபதி குஹ ஸன்னுத ப்ரபாவம்**
**ஸதத மஹம் ப்ருஹதீஸ்வரம் ப்ரபத்யே**

ப்ரணவமாகிய மரத்தில் பறவை போல் விளங்கும் முக்கிய தேவானாய் இருப்பவரும் முக்குணங்களால் உண்டான பிறப்பு, இறப்பு என்ற காட்டை அழிக்க கூடிய அக்னியாக இருப்பவரும் கணபதி மற்றும் முருகனால் துதிக்கப்படுபவரும், சிறந்த மகிமை உடையவரும், ஈஸ்வரர்களுக்கெல்லாம் பெரியவருமான ஐயப்பனை வணங்குகின்றேன்.

## ஒரு ஐயப்ப பக்தனுக்கு கிடைக்கும்

ஒரு நல்ல குருசாமி மூலம் தொடர்ந்து 3 ஆண்டுகள் 41 நாட்கள் விரதம் அனுஷ்டித்து பெருவழிப்பாதையில் வந்து செல்கின்ற ஐயப்ப சுவாமிக்கு வாழ்க்கையில் ஐயப்பனால் சந்தோசமான, ஆரோக்கியமான வாழ்வும், கடன்கள் இல்லாத நல்ல பணவரவுள்ள வாழ்வுள்ள வாழ்க்கையும் அமைகின்றது.

ஒரு சுவாமி கருப்பு அல்லது நீலம் அல்லது காவி உடையணிந்து துளசி மணிமாலை அணிந்து சந்தனம், குங்குமம், விபூதி அணிந்து பக்தி பூர்வமான மனிதனாகின்றானே. அந்த சுவாமி முகத்தில் ஒரு தேஜஸ் உண்டாகிவிடுகிறது.

உண்மையான விரதம் இருக்கும் சுவாமிமார்களின் நடத்தைகளினால் மக்களிடையே கௌரவம் ஏற்பட்டு தனி மரியாதை தருகிறார்கள். இந்த ஜனங்களின் மரியாதையையும், வீட்டிலும், வெளியிலும் தன்னை உயர்வாக நடத்துவதாலும் அடிக்கடி பூஜை செய்து கோயில் பஜனை முதலிய இடங்களுக்கு செல்வதாலும் அந்த சுவாமிக்கு ஒரு தனி நல்ல குணம் உண்டாகி விடுகின்றது. கோவம் குறைந்து அன்பாக பேசும் குணம் வந்து விடுகின்றது. 15 நாட்கள் ஒரு மனிதன் ஒரு பழக்கத்தை தொடர்ந்து மேற் கொண்டால் அந்த பழக்கம் அந்த மனிதனிடம் நிறந்தரமாக பணிந்து விடுகிறது என்பது ஆன்றோர்வாக்கு ஆகையால் ஒரு சுவாமி சுறுசுறுப்பாக காலையில் எழுந்து குளித்தல், யாவருடனும் அன்பாக பழகுதல், மிகவும் சுத்தமான குறைந்த உணவு சாப்பிடுதல் போன்ற பழக்கங்கள் 41 நாட்கள் விரதம் இருக்கும் சுவாமியிடம் படிந்து அதே பழக்கமாகி விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு கட்டுபாடு

இரண்டு வேளை மட்டும் உணவுண்டு, வெளியில்“ கண்டபடி தயாரித்து விற்கப்படுகின்ற கடை உணவுகளை ஒரு சுவாமி தவிர்பதால் அவருடைய உடம்பின் ஒவ்வொரு பகுதியும் ஆறோக்கியமாகிறது. 5 மணிக்கு எழுதல், பகலில் தூங்காமை முதலிய பழக்கவழக்கங்களால் இரவில் நல்ல தூக்கம் வருகிறது. புதிதாக முளைத்துள்ள சத்தற்ற “அக்பாஸ்ட் புட் ” சாப்பிடுவதை நிறுத்தியும், கண்ட உணவை கண்டபடி சாப்பிடுவதை நிறுதிதினாலோ உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

## ஐயப்ப பக்தர்கள் பின்பற்ற வேண்டிய விரதங்களும், பயண விதிமுறைகளும்

### விரதவிதிமுறைகள்

1. ஐயப்ப பக்தர்கள் இன்றைய வரை கார்த்திகை மாதம் முதல் நாள்“ மாலையணிந்துக்கொள்வது சாலச்சிறந்தது. அன்று நாள், கிழமை பார்க்க வேண்டியதில்லை அதற்கு பின் மாலை அணிபவர்கள் 19ந் திகதிக்குள் ஏதாவதொரு நல்ல நாளில் மாலை அணியலாம் எப்படியும் சன்னிதானதுக்குச் செல்லும் தினத்திற்கு முன்னதாக குறைந்தது 1 மண்டலம் (41 நாட்கள்) விரதம் இருக்கும் படி பார்த்து அதற்குள் மாலை அணிந்துக்கொள்ள வேண்டும்.

2. துளசி மாலை அல்லது உருத்திராட்ச மாலை 108 அல்லது 54 மணிகள் உள்ளதாக பார்த்து வாங்கி அத்துடன் ஐயப்பன் திருவுருவப் பதக்கம் இணைந்து அணிய வேண்டும். அத்துடன் துணை மாலை ஒன்றும் அணிந்துக்கொள்வதும் நல்லது.

3. பலமுறை விரதம் இருந்து சபரிமலை சென்று வந்து பக்குவமடைந்த பல மலை ஐயப்பன் மார்கள் ஒருவரை குருவாக ஏற்று திருவிளக்கு முன்பாகவோ, திருக்கோவில்களிலோ குருநாதரை வணங்கி அவர் திருக்கரங்களால் மாலை அணிந்துக்கொள்ள வேண்டும் அல்லது தாய் தந்தையார் மூலமாகவோ இறைவன் திருவடிகளில் வைத்து எடுக்கப்பெற்ற மாலையினையோ அனிந்துக்கொள்ளலாம். மாலை அணிந்துகொண்ட உடன் குரு நாதருக்கு தங்களால் இயன்ற தட்சனையை கொடுத்து அடி வணங்கி ஆசி பெற வேண்டும் ஐயப்பனாக மாலை தனித்த நிமிடத்தில் இருந்து குருசுவாமியை முழு மனதுடன் ஏற்று அவர் தம் மொழிகளை வேத வாக்காக மதித்து மனக்கட்டுபாட்டுடன் பணிந்து நடந்துக்கொண்டு பயணம் இனிதாக்க ஒத்துழைக்க வேண்டியது அவசியம்

4. நீலம், கருப்பு, காவி, பச்சை இவற்றுள் ஏதாவதொரு நிறத்தில் உடைகள் அணிய வேண்டும்.

5. மலைக்குச் செல்லக்கருதி மாலை அணிய விரும்பும் பக்தரை தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலியோர் தடுத்தல் கூடாது. எவ்வித அச்சமும் இல்லாமல் தர்ம சாஷ்தாவிடம் முழுப் பொறுப்பினையும் வைத்து முகமலர்ச்சியுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

6.மேற் கொள்ள வேண்டிய விரதங்களில் மிகவும் ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது பிரமச்சர்ய விரதமாகும். மனம், வாக்கு, செயல் என்ற மூவகைகளிலும் காம இச்சையை அறவே நீக்க வேண்டும்.

7. காலை, மாலை இரு வேளைகளிலும் குளிர்த நீரில் தவறாமல் நீராடி ஐயப்ப திருவுருவப்படத்தை வைத்து வணங்குதல் வேண்டும். தினமும் ஆலய வழிபாடும் பஜனையில் கலந்துக்கொண்டு வாய்விட்டு கூவி சரணம் விழித்து ஐயப்பன் புகழ் பாடி மகிழ்தலும் பேரின்பம் பயக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. படுக்கை விரி, தலையனைகளை நீக்கி தன் சிறு துண்டை தரையில் வைத்து உறங்க வேண்டும். பகல் நேரத்தில் உறங்குவதை முற்றாக தவிர்க வேண்டும்.

9. களவு, சூதாடுதல், பொய், திரைப்படங்கள், விளையாட்டு, வேடிக்கை, உள்ளாச பயணங்கள், போதையூட்டும் பொருட்கள் முதலியவற்றை தவிர்க்க வேண்டும்.

10. எண்ணெய் தேய்துக் குளிப்பது, முடி வெட்டுதல், சவரம் செய்தல், பாதணிகள் அணிவது முதலியவற்றை தவிர்க்க வேண்டும்.

11. மற்றவர்களுடன் பேசும் பொழுது "சாமி சரணம்" எனத் தொடங்கி பின் விடைபெறும் பொழுது " சாமி சரணம்" என சொல்ல வேண்டும்.

12. விரதகாலங்களில் அசைவ உணவு அருந்துவது தவறாகும் எனவே இயன்றவரை வீட்டிலேயே தூய்மையாகத் தயாரித்து சைவ உணவு உண்ண வேண்டும். மாலை தரித்த ஐயப்பன்மார் வீட்டைத் தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத்தினாலும் உணவு உட்கொள்ளக் கூடாது.

13. பக்தர்கள் மாலை தரித்த பிறகு சந்திக்கின்ற ஆண்களை "ஐயப்பா" என்றும் பெண்களை "மாளிகைப்புரம்" என்றும் "மணிகண்டன்" என்றும் சிறுமிகளை "கொச்சு" என்றும் அழைக்க வேண்டும்.

14. சபரிமலை செல்லும் பக்தர்கள் புதிதாக பயணம் வரவிரும்புவர்களிடம் நான் பத்திரமாக கூட்டிக் கொண்டு போய் வருகிறேன். என்னோடு தைரியமாக வரலாம் என்று சொல்லக் கூடாது. பயணம் புறப்படும் போது "போய்வருகிறேன்" என்று யாரிடனும் சொல்லிக் கொள்ளக் கூடாது. எல்லா பொறுப்பினையும் ஐயப்பனிடம் ஒப்படைத்து அவன் திருவடிகளே சரணம் என்று பக்தியுணர்வுடன் சரணம் விழித்து புறப்பட வேண்டும்

15. மாலையணிந்த ஐயப்பன் மார்கள் தங்களது கடமைக்கு இடையூர் இல்லாமல் சுறுசுறுப்புடன் தங்கள் பணிகளை செவ்வனே செய்ய வேண்டும்.

16. மாலையணிந்தது முதல் பக்தர்கள் நாள்தோறும் 108 சரணங்கள் சொல்லி காலை மாலை வழிப்பட்டு துளசி, கற்கண்டு, நாட்டுச் சக்கரை,பால் இவற்றுல் ஏதாவது ஒன்றை வைத்து நைவேத்தியம் செய்து வணங்க வேண்டும்.

17. யாத்திரை புறப்படுவதற்கு சில நாட்கள் முன்னதாகவே கன்னிப் பூஜை நடத்த வேண்டும். எல்லா ஐயப்ப பக்தர்களும் தங்கள் வீட்டிலோ அல்லது குருசுவாமி மற்றும் ஐயப்ப பக்தர்கள் வீட்டிலோ பொது இடங்களிலோ கூட்டு வழிப்பாடு (பஜனை) நடத்தி எல்லோருக்கும் பிரசாதம் வழங்கி அருள் பெறுவது சாலச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மரணம் போன்ற துக்க காரியங்கள் எதிலும் ஐயப்பன்மார்களும் குடும்பத்தினர்களும் கலந்துக் கொள்ள கூடாது தவிர்க்க முடியாத நெருங்கிய உறவில் மரணம் நேரிட்டு கலந்துக்கொள்ள வேண்டியிருந்தால் தாம் அணிந்த மாலையை கலட்டி ஐயப்பன் படத்தில் மாட்டிய பிறகுதான் கலந்துக்கொள்ள வேண்டும். மாலையை கலட்டும் நேர்ந்தால் மீண்டும் உடனே அணிந்துக்கொண்டு யாத்திரை செல்ல முற்படக்கூடாது ஐயப்பன் திருவருளை வேண்டி மறு வருடம் சென்று வர வேண்டும்

19. எல்லா விரதங்களும் பிரமச்சரிய விரதம் முக்கியமானதாகும் எனவே எந்த பெண்களை கண்டாலும் தாயென்றே கருத வேண்டும். மாதவிளக்கான பெண்களை காணக் கூடாது. தவருதலாக காண நேர்ந்தால் உடனே நீராடி ஐயப்பனை வழிபட வேண்டும். பெண்கள் ருது மங்கள சடங்கு விழாவிற்கோ, குழந்தை பிறந்த வீட்டிற்கோ சென்று கலந்துக் கொள்ள கூடாது.

20. இருமுடிகட்டு பூஜையை தன் வீட்டிலோ குருசுவாமி வீட்டிலோ, கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும்.

21. குருவை அடிப்பணிந்து வணங்கி தங்களால் இயன்ற தட்சனையை கொடுத்து குருவின் கரங்களால் இருமுடியை தலையில் ஏற்று வீதிக்கு வந்ததும் வாசப்படியில் விடலை தேங்காய் உடைத்து ஐயப்பன் சரணம் கோசத்துடன் பின்னால் திரும்பி பார்க்காமல் ஒரே நோக்கத்துடன் பயணம் தொடர வேண்டும் யாரிடமும் போய்வருகிறேன் என்று சொல்லக் கூடாது.

22. கன்னி ஐயப்பன்மார்கள் யாத்திரை புறப்பட்ட நேரத்திலிருந்து ஐயப்பன் சன்னிதானம் செல்லும் வரை அவர்களாக இருமுடியை தலையிலிருந்து இறக்கி வைக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ கூடாது. குரு நாதர் அல்லது மற்ற பலமலை ஐயப்பன்மார்களை கொண்டு ஏற்றவோ இறக்கவோ வேண்டும்.

23. 12 வயத்திற்கு கீழ்பட்ட சிறுமிகளும் ருதுகாலம் நின்ற வயதான பெண்களும் மட்டுமே சபரிமலை யாத்திரையில் களந்துக் கொள்ளலாம்.

24. யாத்திரை வழியில் அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி முதலான விலங்குகள் இருக்குமானதால் கூட்டமாக சரணம் விளித்துக்கொண்டே செல்ல வேண்டும். இரவில் காட்டிற்குள் மலசலத்திற்காக தனியே அதிக தூரம் செல்லக் கூடாது சரணம் விளித்தல், சங்கு ஒலித்தல், வெடி வைத்தல் பாதுகாப்புக்கு சிறந்த வழியாகும்.

25. பம்பை நதியில் நீராடும் போது மறைந்த நம் முன்னோர்களுக்கு ஈமகடன் செய்து முன்னோர்களின் ஆத்மா சாந்திபெற வழிவகுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பம்பையில் சக்தி பூஜையின் போது ஐயப்பன்மார்கள் சமைக்கும் அடுப்பிலிருந்து சிறிதளவு சாம்பல் சேகரித்து சந்நதி ஆழியில் இருந்து எடுக்கப்பட்ட சாம்பலை அத்துடன் கலந்து தயாரிக்கப்பெறுவதுதான் சபரிமலை பஸ்பம் இது மிகவும் சக்தி வாய்ந்ததாகும்.

27. இருமுடியில் ஐயப்பனுக்காக கொண்டு செல்லும் நெய் தேங்காயை சன்னிதானத்தில் உடைத்து அபிஷேகம் செய்து பெற்றுக்கொள்ள வேண்டும். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் இந்த நெய்யையும் விபுதி பிரசாதங்களையும் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

28. ஐயப்பனுக்கு காணிக்கையாக சுற்றத்தார்களும், மற்றவர்களும் கொடுத்தனுப்பும் காணிக்கையை சன்னிதானத்தில் செலுத்தி அவர்களுக்கு ஐயப்பன் திருவருள் கிடைக்க வேண்டிக்கொள்ள வேண்டும்.

29. குருசுவாமிக்கு ஐயப்பன்மார்கள் கொடுக்கும் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதை மனமகிழ்வுடன் பெறும் பொருளாக ஏற்று குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி பேரருள் பெற்றிடுவது குருமார்களுக்குச் சாலச் சிறந்தது

30. ஐயப்பன்மார்கள் எல்லோரும் குறிப்பாக கன்னி ஐயப்பன்மார்கள் பெரிய பாதையில் (அழுதை) வழிச் சென்று வருவது மிகுந்த பயன் விளைவிக்கும்
ஆனால் சிலர் தங்கள் தொழில், கடமை , சூழ்நிலைக் கருதி எரிமேலியிலிருந்து சாலை காயம் வழியாகவும், சிலர் வண்டிப் பெரியாரு வழியாகவும் சபரிமலை செல்கிறார்கள் என்றாலும் மேற்குறிப்பிட்ட பெரிய பாதையில் செல்லும் போது மலைகளில் விளையும் பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினை பெருவதாலும் பல மூலிகைகள் கலந்த ஆற்று நீரில் குளிப்பதாலும் உடல் நலன் ஏற்படும். எழில் மிக்க இயற்கை காட்சிகளை கண்டு களிப்பதால் உள்ளம் பூரிப்பதாலும் பேரின்பமும் பெருநலமும் அடைகின்றோம் நீண்ட வழிப்பயணத்தில் ஐயப்பன் சரண மொழி அதிகம் விளிப்பதால் பகவானின் திருநாம உச்சரிப்பு மிகுந்த பக்தி உணர்ச்சி வளருகின்றது.

31. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பன் திருவருள் பிரசாத கட்டினை தலையில் ஏந்தியப்படி வாசற்படியில் விடலைத் தேங்காய் அடித்து வீட்டிற்குள் நுழைய வேண்டும். வழிப்பாட்டு அறையில் கற்பூர ஆராத்தியோடு கட்டினை அவிழ்த்து பூஜை செய்து பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்க வேண்டும்.

32. யாத்திரை இனிதே நிறைவேயியதும் குருநாதர் மூலம் மாலையை கலட்டி ஐயப்பன் திருவருள் படத்திற்கு அணிவித்து விட்டு விரதம் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் ஐயப்பன் திருவருளால் எல்லா நலன்களும் வாய்க்கப் பெற்று பல்லாண்டு இனிது வாழ பகவான் நாமம் பாடி துதிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் அதன் மகத்துவங்களும்

ஐயப்ப விரதமுறைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அகத்திய மாமுனிவரால் வகுத்து தரப்பட்டவைகள் என்றாலும் இந்த 21ம் நூற்றாண்டில் தின வாழ்க்கையில் பலவித பதற்றமான மனமிருந்தும் வாழ்க்கையில் சுகமின்றி, நிம்மதியின்றி வாழ்க்கை வாழ்கின்ற மனித குலத்துக்கு அருமருந்தாக இந்த விரதங்கள் அமைந்துள்ளது.

ஐயப்பனின் தரிசனத்திற்கு ஐய்யன் சன்னிதாத்தை அடைவதற்கு மகத்துவமான 18 படிகளை இருமுடியுடன் ஏறுவதற்கு இந்த விரதங்கள் அவசியமாகின்றது. ஆசாபாசங்களில் இருந்து வேறுப்படுத்தி தனித்தன்மை அடையும் வழியாக இவ் விரதமுறைகளை யோகிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த விரத நாட்களை அக்கத்திய முனிவர் அஸ்டாங்க யோக விதிமுறைகளின் படி 90 தினங்கள் விரதம் என ஏற்படுத்தினார் பின்னால் வந்த வில்வ மங்கள சுவாமிகள் 56 நாட்களாக குறைத்தார் இன்று நடைமுறையில் 41 நாட்களாக (1 மண்டலம்) மாறிவிட்டது

விரதங்களை தீவிரமாக கடைப்பிடிக்கும் போது நமது உடலும் உள்ளமும் நல்ல சிந்தனையில் ஒன்றாகும் போது நம்மை நாம் உணர முடிகிறது. நாம் யார்? நாம் என்ன செய்கின்றோம்? என்பதை உணர்ந்து வாழ்க்கை என்ன என்பதை உணர்கின்றோம். நமது ஆசாபாசங்களிலிருந்து முழுவதும் அகற்றி உடலையும் உள்ளத்தையும் எல்லா உணர்வுகளிலிருந்தும் மீட்டு மனதை சாந்த நிலைக்கு விரதங்கள் கொண்டு வருகிறது.

விரத நிலையில் உள்ள நம்முடைய சாந்தியான மனதில் ஹரிஹரபுத்ரனுடைய மோகன ரூபத்தை வைத்துப் பார்த்தால் தம் உள்ளத்தின் உள்ளே நாம் என்பதற்கு ஐயப்பனின் உருவமே மனதில் நிறையும் இந்த நிலையை அடையும் போது பரிசுத்தமான சுவாமியாக மாறிவிடுகிறோம் இவ்வாறு காமம், கோபம்ஈ விரக்த்தி, ஆசை, கர்வம், போட்டி, பொறாமை போன்றவற்றை நீக்கிய சுவாமியாக ஆகி ஐயப்பனை தரிசிக்கும் போது தான் ஐயப்பனின் பூரண அனுக்கிரகம் கிடைக்கும்.

உண்மையான விரதங்கள் இருந்து 18 படி எறுபவர்களையே 18 படி காவல் தெய்வங்களான கடுத்த சாமி, கருப்பு சுவாமிகளும், 18 படிகளில் இருக்கின்ற காவல் தெய்வங்களான 18 தேவதைகளும் நற்பலன்களை அள்ளித்தருவார்கள் விரதங்கள் குறைவாக கடைப்பிடித்தவர்களை இந்த காவல் தெய்வங்கள் தண்டிப்பார்கள் முறையாக பூரண விரதமிருந்து இருமுடியுடன் 18 படிகள் ஏறி தன்னை காணவரும் பக்தனை ஐயப்பன் ஏற்று அந்த பக்தனுக்கு தனது முழு அருளையும் அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடி கட்டுவது ஏன்?

மணிகண்டன் என்ற நாமத்துடன் ஐயப்பன் சுவாமி பூவுலகத்தில் ராஜசேகரன் மன்னன் மகனாக வாழ்ந்த போது புலிப்பால் கொண்டுவர காட்டுக்குச் சென்றான் அப்போது குல தெய்வமாகிய சிவபெருமானை துணைக்கு அழைப்பது போல் மூன்று கண்ணுடைய தேங்காயை எடுத்துக் கொண்டு போகும்படி மணிகண்டனுக்கு மன்னன் ஆலோசனை சொன்னான். ஐய்யப்பனுக்கு மன்னன் இருமுடி கட்டி உணவு பொருட்களை அதில் வைத்து மணிகண்டன் தலையில் வைத்து அனுப்பினான் அவரும் அப்படி செய்தார் அதே பழக்கத்தைதான் இப்பொழுது சபரிமலை யாத்திரை செல்பவர்கள் இருமுடி சுமந்து செல்வதன் மூலம் கடைப்பிடித்து வருகிறார்கள். இருமுடியில் ஒருபுறம் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டிய பொருட்கள் மறுபுறம் பக்தனுக்கு தேவையான பொருட்கள் யாத்திரை முடியும் போது ஐயப்ப பக்தன் தனக்கென கொண்டு போன பொருட்களை எல்லாம் காளி செய்து விடுகிறான் ஆண்டவனின் 18 படிகளை கடக்கிறான் ஆண்டவனை நெருங்கும்வரை தான் "தனது" என்று தேவைப்படுகிறது நெருங்கிய உடன் நம்கென்று ஒன்றும் தேவையில்லை எல்லாம் அவனுக்கே அர்ப்பணம் ஆகிவிடுகிறது என்பதுதான் இருமுடியின் தத்துவம்.

## சபரிமலை சென்று வர மாலை அணியக்கூடாத காலங்கள்

தந்தை இறந்தால் ஒரு வருடக்காலமும் தாய் என்றால் ஆறுமாத காலமும் மனைவி என்றால் மூன்று மாத காலமும் சகோதரர் என்றால் ஒன்றரை மாத காலமும் புத்திரன் என்றால் ஒன்றரை மாத காலமும் பங்காளி என்றால் ஒருமாத காலமும் மலையேறுவதும் சுபக்காரியங்கள் செய்வதும் கூடாது. அப்படி செய்ய வேண்டுமென நிர்பந்தம் ஏற்பட்டால்" கணபதியை பூஜித்து அன்னதானம் செய்து எல்லாவித சுப காரியங்களும் செய்யலாம் என அருளிச் செய்த ஸ்ரீ யோகேஸ்வரர் ஏவல் கீய மகரிஷியின் அருள் வாக்கினையே சபரிமலை ஏறுவதற்கு ஐயப்ப பக்தர்கள் கையாலும் உத்தமம் ஏதேனும் தவிர்க்க முடியாத பிரச்சினை என்றால் குரு சுவாமியை கலந்து ஆலோசித்து பின்புதான் யாத்திரை மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41 நாட்கள் விரதம் ஏன்?

பரசுராமர் கேரளத்தின் பாதுகாப்பிற்காக ஸ்தாபித்த 108 சாஸ்தா ஆலயங்களில் ஒன்றே சபரிமலை ஆலயம் பந்தலம், கோவிலகம், ராணி, கர்த்தாக்களையும் கடந்து இறுதியில் திருவிரதாங்கூர் தேவஸம் போட்டு அதிகாரத்திற்குறப்பட்டுள்ள இந்த ஆலயத்தை குறித்து பல்வேறு கதைகளுண்டு

நான்கு முறை அக்னிதேவனால் விழுங்கப்பட்ட ஆலயத்தின் தீவிர நம்பிக்கையின் வெளிப்பாடே தற்போதய ஆலயம். கொள்ளம் வருடம் 1029 (கிறிஸ்து வருடம் 1853) 1049 (1873), 1079 (1903), 1125 (1949) காலக்கட்டங்களில் பொன்னம்பல மேட்டின் தலைவனான தர்ம சாஸ்தாவின் ஆலயம் தீக்கிரையானது. 1079 இல் ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா காலத்தில் வெந்து சாம்பலான ஆலயம் போலச் சிறய்க்கள் கொச்சும் மன்னனின் தலைமையில் புனர்நிர்மானம் செய்யப்பட்டது 1125 இல் மீண்டும் அக்னிதாண்டவம் அதன் பின் புனர்நிர்மானம் செய்யப்பட்டதுதான் தற்போதய ஆலயம்.

பரசுராமன் பிரதிஷ்டை செய்த சாஸ்தாவின் விக்கிரகிரகத்தில் ஸ்ரீ ஐயப்பன் சென்று ஐக்கியமானார் என்பது ஐதீகம்

இருமுடிக்கட்டுடன் சரணம் முழங்கி மலையேறும் போது அதன் பொருள் அறிந்து சொல்பவர் மிகச் சிலரே தன் தாய் பந்தல ராணியின் நோய் நீக்க புலிப்பாலுக்காக தயார் செய்ததுதான் இருமுடிக்கட்டு அமைச்சர்தான் ஐயப்பன் மீது காட்டிய வஞ்சனையின் தண்டனையாக 41 நாள் விரதம் மேற் கொண்டது பிற் காலத்தில் 41 நாள் விரதமாக வழக்கத்தில் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக்கட்டுபாடு

மாலையணிந்த சுவாமி தன்னை சுற்றியுள்ள அனைவரும் மரியாதையோடு கவனிக்கிறார்கள் என்ற எண்ணமே ஒரு சுவாமியின் அனாவசிய பேச்சி, சினிமா, அரசியல் அரட்டை பேசுவது என்பனவற்றை குறைத்துவிடுகிறது. எத்தகைய அழகான வாலிப பெண்களோடு பழகினாலும் மாளிகைப்புரம் என்ற வார்த்தையிலேயே மனசஞ்சலங்கள் நீங்கி அந்த சுவாமி தூய மனிதராக விளங்குகிறார்.

## வீட்டில் அமைதி

சுவாமி என்றாலே வீட்டில் மரியாதை தருவார்கள் தவிர மது, மாமிசம் சாப்பிடாமல் தனது கணவர் இருப்பதை கண்ட மனைவி பெரும் மகிழ்ச்சியடைகிறாள். இதனால் கோபம் இல்லாத கணவன் மனைவி உள்ள வீட்டில் அமைதி தாண்டவமாடுகிறது.

சபரிமலை சென்று மாளிகைப்புரத்தம்மனுக்கு துணி, பிற்காணிக்கை கொடுத்து தன் வீட்டுக்கு ஒரு ரவிக்கை துணி கொண்டு வருவார்கள் வீட்டில் தடங்களாகி நிற்கும் திருமணம் நடைபெறுகிறது. சபரிமலை கன்னிமூலக் கணபதி கோயிலில் மணி கட்டுபவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கின்றது. விரதம் இருந்து இருமுடியோடு ஐயப்பனை வேண்டி 18 படி ஏறுபவர்களுக்கு வேண்டியது நிறைவேறுகிறது நோய்நொடிகள் தீருகிறது. இத்தகைய அற்புதங்களை மற்றவர் மூலம் கேள்விப்படும் ஒவ்வொருவரும் தாங்களும் அவ்விதமே சபரிமலைக்கு வேண்டி விரதம் இருந்து பூதநாதன் அகிலாண்ட கோடி நாயகன் ஐயன் ஐயப்பனை தரிசிக்க செல்கின்றனர்

இவ்வளவு நல்ல குணங்கள் மாலை போட்ட சாமிக்கு ஏற்படுவதால் இத்தகைய நல்ல குணங்களை வருடம் முழுவதும் ஒரு சுவாமி கடைப்பிடித்தால் அவரது வாழ்க்கையில் துன்பமே இருக்காது ஆனந்த வாழ்க்கைதான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவுப் பூண்ட ஸ்ரீ ஐயப்பனுக்கு ஆபரணம் அணிவிப்பது ஏன்?

சபரிமலையில் துறவுப் பூண்ட யோக நிலையில் ஐயப்பன் எழுந்தருளி இருக்கிறார். அப்படியிருந்தும் மகர விளக்கின் போது பந்தல மகாராஜா அரண்மனையில் இருந்து ஆபரணங்கள் வருவதும், அதை அணிவிப்பதும் சிறப்பு பூஜை நிகழ்ச்சிகளாகும் துறவியான சுவாமி ஆபரணங்கள் பூண்டு காட்சி தருவதேன்? ஐயப்பன் தன் அவதார நோக்கத்தின் நிமித்தம் பந்தல நாட்டை விட்டுச் சபரிமலைக்கு புறப்படும் போது எல்லோரிடமும் தனியாக விடைபெற்றுக்கொண்டு வந்தார். அவர்களுள் பந்தல நாட்டில் அவருக்கு குருவாக இருந்த குருவும் ஒருவர். அந்த குருவிடம் சுவாமி உங்களுக்கு குருதட்சனையாக நான் என்ன தரவேண்டும் எனக் கேட்டார்.

குரு நெகிழ்ந்து போய் பெருமானே நீ எனக்கு இப்பிறவியில் மாணாக்க எற்றறு கூறும் பெயரே எனக்கு குருதட்சனை என்றார் அவருடைய மனைவியோ ஊமையாகவும், குருடாகவும் இருக்கும் அவர்கள் குழந்தைக்கு குணப்படுத்தி தரவேண்டும் என வேண்டினாள்.

குரு பத்தினியின் கோரிக்கையின் படி அந்த குழந்தைக்கு பிணி நீக்கச் செய்தார் ஐயப்பன் அப்பொழுது குரு தம்முன் நிற்பது தெய்வம் என்று உணர்வைக் கடந்து நெகிழ்ச்சியுற்ற நிலையில் ஐயனே நீ தங்கமும், ரத்தினமும் ஜொலிக்க மகாராஜனாய் இருக்க வேண்டும் என்று ஆசீர்வதித்து விட்டார்.

எல்லாவற்றையும் கடந்த சுவாமிக்கு ஏன் சுவர்ண ஆபரணங்கள் என்ற உணர்வு அந்த குருவுக்கு அப்பொழுது தோன்றவில்லை எனினும் குருவின் ஆசிதானே அது பொய்த்து விடக்கூடாது அதனால்தான் ஆண்டுக்கு ஒருமுறை மகர விளக்கு விழாவின் போது தை முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரை சுவாமி பந்தல ராஜன் பரம்பரையினர் கொண்டுவரும் ஆயிரம் சவரனுக்கு மேற்பட்ட தங்க, ரத்தின ஆபரணங்களை அணிந்து காட்சி தருகிறார் ஸ்ரீ ஐயப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

## காப்பு

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலால் கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரி விரத பாடல்
## காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு
காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்

பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்

சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்

பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்

அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக்
காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு

வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா

நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே

காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்

காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்

முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்

முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாலை அணியும் மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம்

குரு முத்ராம் நமாம்யஹம்

வனமுத்ராம் சுத்தமுத்ராம்

ருத்ர முத்ராம் நமாம்யஹம்

சாந்த முத்ராம் சத்ய முத்ராம

வ்ரத முத்ராம் நமாம்யஹம்

சபர்யாக்ரம சத்யேன

முத்ராம் பாது சதாபிமே

குரு தக்ஷிணயா பூர்வம்

தஸ்யா அனுக்ரக காரிணே

சரணாகத முத்ராக்யம்

த்வத் முத்ராம் தாரயாம்யஹம்

சின்முத்ராம் கேசரி முத்ராம்

பத்ர முத்ராம் நமாம்யஹம்

சபர்யாசல முத்ராயை

நமஸ்துப்யம் நமோ நம

இதைச் செல்லிச் சரணம் கூப்பிட்டு பின் மாலை அணிந்துக்கொள்ள வேண்டும்

## மாலை கழட்டுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்ய தர்சன காரண
சாஸ்த்ரு முத்ராத் மஹாதேவ - தேஹி மே வ்ரத மோசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றியெட்டு சரணக்கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவரிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மை பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோருக்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குல தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐய்யமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்கார பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுகவரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐயனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குலத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொண்ணம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணிகண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பபையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைத்தீர்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சனை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூய உள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடி பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எரிமேலி சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மசாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்தர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தி தரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேருத்தோடு தரிசணமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளைகட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டு பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனை பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறை கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிபாறை கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பாநதி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் பாவமெலாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ ராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜைக் கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீபஜோதி திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | பலவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புழத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறையுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சி குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பன்ன சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கடுத்த சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராசப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாத திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
